**ஏப்ரல் – 21**

**"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்." - எபி 4 : 15, 16**

சோதனையின் நேரத்தில் நமக்கு உதவி செய்ய, அந்தப் பெரிய போதகருக்கு இருக்கிற அன்பையும், ஞானத்தையும், திறமையையும் தன்னிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்த அவருக்கு இருக்கிற விருப்பத்தையும் நினைவு கூர்ந்து, விசுவாசத்தின் முழு நிச்சயத்தோடு அவரிடத்துக்கு இருதயம் தன்னையே ஏறெடுக்க வேண்டும். இதைப் போலொத்த அவசியமான நேரத்தில் உதவிக்காக மன்றாடுவது, நீதிக்காகவும் நிச்சயமாகவே கர்த்தருடைய ஆலோசனையையும், உதவியையும் பெலனை நமக்கு எடுத்துக் கொள்ளும். இந்த விதமாக நாம் மணிதோரறும் நாள்தோறும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகி முடிவாக ஜெயங்கொண்டவர்களாவோம். **-Z '98, 23 (R 2248).**

* * * * *

தத்துவரீதியில் கர்த்தர் சகித்திராத, மாம்சத்திலிருந்தும், உலகத்திலிருந்தும், சாத்தானிலிருந்தும் ஏற்படுகிற எந்த சோதனையின் அனுபவமும் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஏற்படுகிறதில்லை. அவருக்கு ஏற்பட்ட சோதனைகள் பாவம் சம்பந்தமானவைகளாயிராமல், உலகத்தனம், இயற்கையான தன்னயம், இந்த விதமான வகையில் இருந்தாலும், அவைகள் கடுமையானவைகளாகவும், அதைப் போலொத்த நமக்கு நேரிடுகிற சோதனைகளில் நமக்காக அனுதாபத்தையும் அவரில் உண்டு பண்ணின, அவசியமான ஒவ்வொரு சமயத்திலும், ஒத்தாசைக்காக அவர் மூலமாயும், அவரிலும் தேவனை அணுக, இது நமக்கு நம்பிக்கையைக் கொடுக்க வேண்டும். **-P '27, 55.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எபி 2:17,18; 3:1; 5:1-5; 7:11-28; 8:12; 9:23; லூக் 23:34; யோவா 14:6,13-16;16:23-26; 17:20-22; ரோம 8:34; 1கொரி 10:13; எபே 3:12; எபி 10:19-21.

**கோபுர வாசிப்பு : Z '14, 358 (R 5585).**

**வினாக்கள் :** இந்தப் பாடம் சம்பந்தமாக இந்த வாரத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்ன? நான் அவற்றால் எவ்வாறு பயிற்சியளிக்கப் பெற்றேன்?